**ISSN : *2456-821X*** **அவையம் 1 (2) 2017 P.No. : *61 - 67***

புதிய அவையம்

===============================================================================

## விளியின் தேவை

***முனைவர் ம.சரளாதேவி,***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்,*

***கட்டுரை பெறப்பட்டது: 30.11.2017*** ***ஏற்கப்பட்டது : 18.12.2017***

===============================================================================

*தமிழில் பெயர்ச்சொற்கள் வேற்றுமைகளை ஏற்று அமைந்து வரும். அப்பெயர்ச்சொற்கள் இரண்டு முறையில் வரும். 1. உருபு முறையில் உணர்த்துவது (ஐ, ஆல், கு, இன், அது, கண்) 2. உருபில்லாமல் உணர்த்துவது(பெயர்-எழுவாய், விளி). இவற்றில் இயல்பு நிலை, திரிபுநிலை என்ற இரண்டு வகை உண்டு. திரிபு பெற்று அமையக் கூடியதாக விளி வேற்றுமை விளங்குகின்றது. மற்ற வேற்றுமைகளிலிருந்து இவ்வேற்றுமை வேறுபடுகின்றது. எனவேதான் விளி வேற்றுமையைத் தொல்காப்பியர் தனி ஓர் இயலாகப் படைத்துள்ளார். எனவே விளி வேற்றுமையின் தேவை எவ்வளவு அவசியமானது என்பதை தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

### விளி வேற்றுமை

*விளிக்கு என்று தனி உருபு இல்லை. ஒருவரிடம் ஒரு கருத்தினைத் தெரிவிக்க எண்ணும் சூழலில் பெயரே விளியாக மாற்றம் பெறுகின்றது. ஒரு கருத்தினை நேரடியாகச் சொல்ல விரும்பும் போது விளித் தொடர்கள் அதிகம் பயன்படுகின்றன. உரையாடலுக்கு அதிக இடம் தரும்போது இது வெளிப்படுகிறது. கேட்போரது கவனத்தை ஈர்ப்பதற்காகத் 'தோழி' என்றோ 'தலைவி' என்றோ அவரை விளித்துப் பின்னர் கருத்துகளை எடுத்துரைப்பதும் ஓர் உத்தியாகும்.(ஜெ.நீதிவாணன், நடையியல், ப.57)*

*விளித்தல் என்பது கூப்பிடுதல், அழைத்தல் என்ற பொருளில் வரும். ஒருவரை அல்லது பலரை ஒன்றை அல்லது பலவற்றை விளிப்பதற்காகப் பயன்படும் வேற்றுமை விளி வேற்றுமை எனப்படும். (ச.அகத்தியலிங்கம் ப.144) தொல்காப்பியர் விளித்தொடர் பற்றி வேற்றுமையியலிலும் (சொல்.547) விளிமரபு எனத் தனி ஒரு இயலிலும் குறிப்பிட்டுள்ளார். "பிற வேற்றுமைகளைப் போல விகுதிச் சேர்க்கையால் மட்டும் விளி வேற்றுமை அமைவதில்லை:*

*கழிப்பு முறையாலும், கழிப்பும் சேர்க்கை முறையாலும், ஈற்றெழுத்து திரிதலாலும் விளி அமைகிறது. மேலும் அண்மைவிளி என்று இன்னொரு வகையும் உண்டு. எந்த மாற்றமும் இல்லாமல், சில பெயர்களை அண்மை விளிகளாகப் பயன்படுத்த முடியும். எனவேதான் விளிக்குப் பொதுவான உருபு ஒன்றைத் தொல்காப்பியர் அமைக்கவும் இல்லை. விளியை எழுத்ததிகாரத்தில் ஒரு வேற்றுமையாகக் குறிப்பிடவும் இல்லை."(செ.வை.சண்முகம், தொல்காப்பியத் தொடரியல், ப.90)*

விளித்தல் என்றாலும், அழைத்தல் என்றாலும், கூப்பிடுதல் என்றாலும் பொருள் ஒன்றுதான். இது எட்டாம் வேற்றுமைக்குரிய பொருள். எனவே, எட்டாம் வேற்றுமையை விளிவேற்றுமை என்று அழைத்தனர். நிலைமொழி விளியாய் அமையும் தொடர்களை விளித்தொடர் என்று வழங்குவர். *(மருதூர் அரங்கராசன், தவறின்றித் தமிழ் எழுத, ப.86)* தொல்காப்பியர் *(சொல்.603;)* விளி வேற்றுமை என்பன தம்மை ஏற்கும் பெயரோடு தெளிவாகத் தோன்றும் இயல்பினை உடையன என்று கூறுவர். நன்னூல் *(சொல்.303)* விளிவேற்றுமை: ஈறுதிரிதல் கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றயல் திரிதல் போன்ற இடங்களில் வருவதுடன் படர்க்கைப் பெயர்ப்பொருளைத் தனக்கு எதிர்முகமாக அழைக்கும்படி அமையும் என்கின்றது.

சான்று : *அன்னை - அன்னாய் - ஈறுதிரிதல்*

*அரசன் - அரச - ஈறுகுன்றல்*

*மகன் - மகனே - ஈறுமிகுதல்*

*நம்பி, தோழி - இயல்பாதல்*

*மக்கள் - மக்காள் - ஈற்று அயல் திரிதல்*

*அப்பன் - அப்பா - ஈறுகுன்றி ஈற்றயல் திரிதல்*

*அண்ணன் - அண்ணாவோ - ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறுமிகுதல்*

உயிர் இறுதியும் ஒற்று இறுதியும் ஆகிய உயர்திணைப் பெயரும், அஃறிணைப் பெயரும் விரவுப் பெயரும் முன்னிலைக்கண் விளியேற்குமிடத்து ஈறு திரிதலும், ஈற்றயல் நீடலும் பிறிது வந்தடைதலும் இயல்பாதலும் என நான்கு வகைப்படும்.*(நேமி.சொல்.48)*

நன்னூல் விளி வேற்றுமை குறித்துக் குறிப்பிடும்பொழுது உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப்பெயர்கள், இருதிணைப் பொதுப்பெயர்கள் இவற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதனோடு னகர இறுதி, ளகர இறுதி, ரகர இறுதி லகர, யகர இறுதி குறித்துக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் தொல்காப்பியமும்; நேமிநாதமும் இவற்றோடு சேர்த்து அளபெடை, முறைப்பெயர், தொழிற்பெயர், பண்புப் பெயர் போன்றவற்றையும் தனித்தனியாக எடுத்துரைத்துள்ளன. இவற்றின் வாயிலாக விளிகள் என்பவை மக்களை அழைத்து கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு உதவுகின்றன என்பதை அறியலாம்.

**உயர்திணைப் பெயர்கள் விளியேற்றல்**

உயர்திணைப் பெயர்கள் இ, உ, ஐ, ஒ என்னும் உயிர் எழுத்துகளை இறுதியில் கொண்டு வரும். (தொல்.சொல்.605) ன, ர, ல, ள என்ற நான்கு மெய் ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்கும். (தொல்.சொல்.613)

உயர்திணைப் பெயர்கள் இ, உ, ஊ, ஐ, ஒ என்னும் உயிர்களையும் ன, ள, ர, ல, ய என்னும் மெய்களையும் ஈற்றில் பெற்று வரும். (நன்.304)

சான்று : நம்பி, வேந்து, ஆடூ, விடலை, கோ, ஐயன், வேள், வணிகர், தோன்றல், சேய்

இ, ஐ, உ, ஒ என்னும் நான்கு வகைப்பட்ட உயிரீற்றுப் பெயரும் விளி ஏற்கும். (நேமி.49)

சான்று : நம்பி – நம்பீ, மாதவி – மாதவீ நங்கை – நங்காய்

முத்து – முத்தே வேந்து –வேந்தே, இளங்கோ இளங்கோவே, கோ- கோவே

தொல்காப்பியமும் நேமிநாதமும் இ, உ, ஐ, ஒ என்ற ஒத்த தன்மையுடைய உயிர் ஈறு விளிகளை எடுத்துரைக்கின்றன. நன்னூல் கூடுதலாக ஊ என்ற விளியையும் எடுத்துரைத்துள்ளது. தொல்காப்பியமும் நேமிநாதமும் ன, ர, ல, ள என்ற நான்கு மெய் ஈறுகள் விளி ஏற்கும் என்கின்றன. ஆனால் நன்னூல் ன, ள, ர, ல, ய ஆகிய ஐந்து மெய் ஈறுகள் விளி ஏற்கும் என்கிறது. இவற்றின் வாயிலாகவே உயர்திணைப் பெயர்களை அழைக்க முடியும் என்று வரையறை செய்துள்ளனர்.

ஆனால் இக்காலத்தில் டேய், அடே என்றும் பயன்படுத்துகின்றோம்.

"டேய் கண்ணா என்பதும் டேய் கிறுக்குப் பயலே என்பதும் அடே சின்னப் பசங்களா என்பதும் அடே போக்கிரிப் பையன்களா என்பதும் விளித்தொடர்கள்". (பொற்கோ, இக்காலத் தமிழிலக்கணம், ப181) என்று குறிப்பிட்டுள்ள போதிலும் சிறுவர்களைக் குறிப்பிடவே இவ்விளிகளைப் பயன்படுத்துகின்றோமே தவிர உயர்ந்தவர்களைக் குறிக்க இவ்விளிகளைப் பயன்படுத்துவதில்லை என்று தெளியலாம்.

அஃறிணைப் பெயர்கள் விளியேற்றல்

புள்ளி ஈறுகள், உயிர் ஈறுகளையுடைய அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்கும் காலம் ஏற்பட்டால் ஏகாரம் பெற்று விளி ஏற்கும். (தொல்.சொல்.636)

மொழிக்கு ஈற்றில் வரும் என்று சொல்லபட்ட இருபத்து நான்கு எழுத்துக்களுக்குள் ஞ, ந அல்லாத மற்றைப் பத்தொன்பது எழுத்துகளையும் ஈற்றில் உடைய அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்கும் பெயர்களாகும். (நன்.304)

சான்று : மக, புறா, கிளி, தீ, முசு, பூ, சே, நாரை, சோ, மண், கராம், அலவன், நாய், நகர், குயில், தெவ், பூழ், புள், வண்டு

அஃறிணைப்பெயர் விளி ஏற்குமிடத்து ஏகாரமும் பெற்று விளி ஏற்கும். உயர்திணைக்குச் சொன்னபடியே விளி ஏற்பனவும் உள. (நேமி.53)

சான்று : மாடு – மாடே, கிளி – கிளியே, மரம் - மரமே, அணில் - அணிலே

பொன் - பொன்னே, கார் - காரே, அணில் - அணிலே, தேன் - தேனே

*அலவன் - அலவ ஈறு கெட்டது.*

*முயல் - முயால் ஈற்றயல் நீண்டது.*

*கலுழன் - கலுழா ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது,*

*என்று தொல்காப்பியமும், நேமிநாதமும் ஏகாரம் பெற்று விளி ஏற்கும் என்கின்றன. ஆனால் நன்னூல் பல்வேறு நிலைகளில் மாற்றமடைந்து வந்துள்ளது.*

*இருதிணைப் பொதுப் பெயர்கள் விளியேற்றல்*

*அஃறிணை விரவுப் பெயர்கள், உயர்திணைக்குக் கூறியது போன்று எல்லா ஈறுகளும் விளியேற்கும். (தொல்.சொல்.635)*

*நன்னூல் (சொல்.304) ஓ, ர என்னும் இரண்டும் தவிர்த்த மற்றைய எட்டு எழுத்துகளுடன் ண,ஆ என்னும் இரண்டும் சேரப் பத்து எழுத்துகளையும் ஈற்றில் உடையதாக இருதிணைப் பொதுப் பெயர்கள் அமைந்து வரும்.*

*ஐகாரத்தை இறுதியாக உடைய பொதுப் பெயர்க்கு இயல்பாதலும், ஏ மிகுதலும், அன்றி ஐகாரம் ஆய் எனத் திரிதலும் ஆ எனத் திரிதலும் உருபாம்.(நன்.சொல்.306)*

*எல்லா ஈற்று விரவுப் பெயரும் விளி ஏற்குமிடத்து உயர்திணைக்குச் சொன்னபடியே விளி ஏற்கும்.(நேமி;.சொல்.53)*

*சான்று : இலக்குமி - இலக்குமீ,*

*சாத்தன் - சாத்த, சாத்தா, அன்னை – அன்னாய், அன்னா*

*சாத்தி – சாத்தீ*

*தந்தை – தந்தாய்*

*னகர இறுதி விளியேற்றல்*

*னகர இறுதி ஆவாகவும், அண்மை விளியாகவும், இயல்பாகவும், பண்பாகவும், அளபெடையாகவும், முறைப்பெயராகவும் வினையாலணையும் பெயராகவும் அமைந்து வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.(தொல்.சொல்.615-621)*

*னகர இறுதிப்பெயர் அளபெடுத்தல், ஈறழிதல், ஈற்றயல் நீளல், ஈற்றயல் நீண்டு ஈறு கெடுதல், ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டு ஓகாரம் மிகுதல், ஈறழிந்து ஓகாரம் மிகுதல், இறுதி யகரமாதல், இறுதி யவ்வாய் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய் ஏகாதரம் மிகுதல், ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரம் ஆதல் நன்னூல் (சொல்.307) எடுத்துரைக்கின்றது.*

*னகர ஈற்றுப்பெயர் விளியேற்றல் அன்- ஆஆய் அண்மையில் அகரம், முறைப்பெயரில் ஏகாரமாகும். ஆன் இயல்பு, அளபெடை இயல்பு, ஆன் ஈற்றுப் பண்புப் பெயர், தொழில் பெயர் ஆய் விளியேற்கும்.(நேமி.50)*

*சான்று : முருகன் - முருகா, முருகன் - முருக, வந்தான் - வந்தாய்*

*சாத்தன் - சாத்தா கொற்றன் - கொற்றாய்*

*அம்பர் கிழான் - அம்பர் கிழாஅன் - அளபாயிற்று*

*புலவன் - புலவ - ஈறழிந்தது*

*பெருமன் - பெருமான் - ஈற்றயல் நீணடது*

*மன்னன் -மன்னனா - ஈற்றயல் நீண்டு ஈறு கெட்டது.*

*ரகர இறுதி விளியேற்றல்*

*ஆர், அர் என்பன ஈர் என விளி ஏற்கும். (தொல்.சொல்.623)*

*ரகர ஈறு அளபெடுத்தல், ஈற்றயல் அகரம் இகரம் ஆதல், ஈற்றயல் அகரம் ஈகாரம் ஆதல், ஈற்றயல் ஆகாரம் ஈகாரம் ஆதல், ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகாரம் மிகுதல், ஈற்றில் ஏகாரம் மிக்கு அயல் யா கெட்டு அதனயல் இகரம் ஈகாரம் ஆதல், ஈர் ஏற்றல்(நன்.சொல்.309)*

*ரகர ஈற்றுப்பெயர் விளியேற்றல் அர், ஆர் - ஈர் ஏகாரம் பெறும். ரகாரம்- இயல்பு (நேமி.சொல்51)*

*சான்று : அந்தணர் -அந்தணீர், குறவர் - குறவீர், சான்றார் - சான்றீர், மூத்தார் - மூத்தீர்,*

*பெரியார் - பெரியீர், கணியார் - கணியீரே*

*சிறார் - சிறாஅர், தெவ்வர் - தெவ்வீர், நாய்கர் - நாய்கீர், சான்றார் - சான்றீர்,*

*கணியார் - கணியீரே, நம்பியார் - நம்பீரே, எமர் - எமரீர்*

*என்று நன்னூல் சான்றுகளை ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஆதல் என்று வேறுபட்ட முறையில் அமைத்திருந்தாலும் தொல்காப்பியம், நேமிநாதத்தை ஒத்தே அதன் தன்மை அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.*

*லகர, ளகர ஈறுகள் விளியேற்றல்*

*லகர, ளகர ஈறுகளின் பெயர்கள் நின்ற ஈற்று அயல் நீண்டு விளி ஏற்கும். (தொல்.சொல்.629)*

*ளகர இறுதிப்பெயர் அளபெடுத்தல், ஈறுகெட்டது, ஈற்றயல் நீண்டது, ளவ் வொற்று யவ் வொற்றாயிற்று, ஈற்றயலகரம் ஏகார மாயிற்று.(நன்.சொல்.308) லகர மெய்யீற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும் சில ஈற்றயல் நீளும். (நன்.310)*

*லகர,ளகர- ஈற்றின் அயல் எழுத்து நெடிலாகும். முறைப்பெயர் ஏகாரம் பெறும். அயல் நெடிதானால் இயல்பு.அளபெடை இயல்பு.(நேமி.சொல்.52)*

*சான்று : குரிசில் - குரிசில் தோன்றல் - தோன்றால் மக்கள் - மக்காள்*

*எல்லாள் - எல்லா, குழையாள் - குழையாய், அடிகள் - அடிகேள்*

*திருமால், பெருமாள்*

*தொல்காப்பியம், நேமிநாதத்திலிருந்து நன்னூல் ஒத்தும் வேறுபட்டும் அமைந்துள்ளது.*

*யகர ஈறு விளியேற்றல்*

*யகர ஈற்று உயர்திணைப் பெயர்கள் அளபெடுக்கும். (நன்.சொல்.310)*

*நன்னூல் மட்டுமே யகர ஈறு குறித்து எடுத்துரைத்துள்ளது.*

*சான்று : சேய் - சேஎய்*

*1.அளபெடைப் பெயர்*

*இகர ஈற்றுப் பெயர்கள் அளபெடையோடு வரும்போது ஈ ஆகாது. இயல்பான தன்மையோடு அமைந்து வரும். (தொல்.சொல்.610)*

*ரகர ஈற்று உயர்திணைப் பெயர்களுள் சில அளபெடுக்கும். (நன்.309)*

*உயிரீற்று அளபெடைப் பெயர் அளபெடுத்த படியே இயல்பாய் விளியேற்கும். (நேமி.49)*

*சான்று : தோழி – தோழீஇ, தோழீஇஇ*

*சிறார் - சிறாஅர், சிறாஅஅர்*

*கோமான் - கோமாஅஅன்*

*வேள் - வேஎள்*

*வேண்மா – வேண்மாஅஅள்*

*அளபெடைப் பெயர்கள் மூன்று மாத்திரை அளவு நீண்டும் இயல்பாய் விளி ஏற்கும் நிலையை அறியமுடிகின்றது.*

*2.முறைப்பெயர்*

*முறைப்பெயர் விளியேற்கும் நிலை இரண்டு நிலைகளில் அமைகிறது. 1. திரிபுநிலை, 2. ஏகாரம் பெற்று வருதல்.*

*உறவுப் பெயர்கள் பொதுவாக விளிப்பெயர்களாகவே விளங்குகின்றன. அம்மை, அப்பன், மாமன், அக்கன், தாத்தன், ஐயன், ஆகிய பெயர்கள் அம்மா, அப்பா, மாமா, அக்கா, தாத்தா, ஐயா எனவே வழங்கி வருகின்றன. இவற்றுள் அக்காவைக் குறிக்கும் 'அக்கன்' என்ற பெயர் வழக்கு முற்றிலுமாக மறைந்து போய்விட்டது. கல்வெட்டுகளில் மட்டும் காணப்படுகிறது. 'அண்ணாழ்வி' என்ற பெயர் வழக்கு அண்ணன், அண்ணாவி என மாறி வழங்குகிறது. (தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.43) முறைப்பெயர்களில் ஐ ஈறு ஆய் ஆகி வருவதோடு ஆ ஏற்றும் வரலாம.; ஏகாரம் பெற்றும் விளியேற்கும். (தொல்.சொல்.611) நன்னூலும் தொல்காப்பியம் கூறும் செய்தியை எடுத்துரைக்கின்றதது. (நன்.306*

*முறைப்பெயர்கள் ஏகாரம் பெற்றே விளியேற்கும்.(நேமி.49)*

*சான்று : அன்னை – அன்னாய் அன்னா! அம்மை -அம்மா*

மகன் - மகனே தமையன் - தமையனே மகள் - மகளே

அப்பன் - அப்பா ஈறுகுன்றி ஈற்றயல் திரிதல், அண்ணன் - அண்ணாவோ ஈறுகுன்றி ஈற்றயல் திரிந்து ஈறுமிகுதல் என்று தொல்காப்பியம் நேமிநாதத்திலிருந்து நன்னூல் வேறுபடுமிடங்களைக் காணமுடிகின்றது.

தமிழ்ப்பண்பாட்டின் முக்கிய அங்கமாகத் திகழும் முறைப்பெயர்களை அழைப்பதற்கு விளித்தொடர்கள் மிகவும் பயன்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

3.பண்புப் பெயர்

னகர ஈற்றுப் பண்புப் பெயர் ஆய் பெற்று வந்தது (தொல்.சொல்619). ரகர ஈற்றுப் பண்புப்பெயர் ஈர், ஏ பெற்று விளியேற்கும் (தொல்.சொல். 625) ஆள் என்ற இறுதி ஆய் ஆகி விளி ஏற்கும் (தொல்.சொல்.631)

கரியான் செய்யான் கரியாய் செய்யாய் என்னும் பண்புப் பெயர் ஆய் பெற்று விளியேற்றன.(நேமி.சொல்.50)

சான்று: பெரியான் - பெரியாய் கரியான் - கரியாய்

கரியர் கரியீர் கரியீரே

செய்யாள் - செய்யாய்

தொல்காப்பியமும் நேமிநாதமும் பண்புப் பெயருக்குரிய விளி குறித்து குறிப்பிட்டுள்ளன. ஆனால் நன்னூல் பண்புப் பெயருக்குரிய விளியை எடுத்துரைக்கவில்லை.

உயர்திணை, அஃறிணை, இருதிணைப்பொதுப்பெயர்கள் என்பதன் அடிப்படையிலும், உயிர் ஈறு, மெய் ஈறு என்பதன் அடிப்டையிலும், அளபெடைப்பெயர், முறைப்பெயர், பண்புப்பெயர் என்பதன் அடிப்படையிலும், னகர இறுதிப்பெயர், ளகர இறுதிப்பெயர், ரகர இறுதிப்பெயர், லகர இறுதிப்பெயர், யகர இறுதிப்பெயர் என்பதன் அடிப்படையிலும் விளி வேற்றுமை அமைந்து வரும் என்பதனை இவ்வாய்வு எடுத்தியம்புவதுடன், உயர்திணை, அஃறிணை, முறைப்பெயர்களை அழைப்பதற்கு விளிப்பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக, மிகவும் அவசியமான, தேவையான ஒன்றாக விளங்குகின்றன என்பதனை அறியமுடிகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. ஜெ.நீதிவாணன், நடையியல், ப.57

2. ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல், ப.144

3. செ.வை.சண்முகம், தொல்காப்பியத் தொடரியல், ப.90

4. பொற்கோ, இக்காலத் தமிழிலக்கணம், ப181

5. மருதூர் அரங்கராசன், தவறின்றித் தமிழ் எழுத, ப.86